1983 சனவரி 28

மற்ற நதிகளை இணைப்பது என்றும் அவ்வாறு இணைத்து இங்கே தண்ணீரைக் கொண்டுவருவது என்பதுதான் இப்போது சாத்தியமானது. ஆனால் அணு யுகத்தில் சாத்தியமல்ல என்று எதையும் கூற முடியாது. பணவசதி இல்லை என்பதுதான் அடிப்படைக் காரணம்.

சிங்கம்புணரியில் இயங்கிடும் பெரியாறு மேம்பாட்டுத் திட்டம்.

*வினா எண் 35 திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்கம்புணரியில் உலக வங்கி உதவியுடன் இயங்கும் பெரியார் மேம்பாட்டுத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது.

(அ) அண்டு (ஆ) பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தில் புலிப்பட்டி மதகுக்குக் கீழே சிங்கம்புணரி பகுதியில் விரிவாக்கக் கால்வாய் வெட்டப்பட்டு வருகிறது. இவ்வேலைகள் 1981—டிசம்பர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டு முன்னேற்றமடைந்து வருகின்றன.

திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு இதுவரை எவ்வளவு செலவிடப்பட்டிருக்கின்றது. இதன்மூலம் பஞ்ச நிலங்களுக்கு பாசனம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 31—3—1982 முடிய இவ்வேலைக்காக 53.05 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கின்றது. ஒட்டு மொத்தமாக இந்தப் பகுதியினுடைய வேலைக்காக கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் என்ற அளவிலே அரசு நிதி ஒதுக்கிடு செய்து இந்த நவீனப்படுத்துகின்ற வேலை முனைப்போடு செய்யப்பட்டு வருகின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாக எந்தெந்தப் பகுதிகள் என்று கேட்கவில்லை. அவர்களுடைய தொகுதியிலேயும் புதிய பகுதிகள் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

திரு. இரா, அருணகிரி. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள் எவ்வளவு? எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது? ஏக்கருக்கு எவ்வளவு என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

TRUTH ALONE TRIUMPHS